Date.02.02.2026.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் **(**விரைவு நீதிமன்றம் **)**

விழுப்புரம்**.**

**OS.24/2021**

வா**.**சா**. 5**

பெயர்**.** திரு**.**கிருபா**.**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து வந்த சம்மனில் வழக்கிற்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் எடுத்து வர வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆமாம். இந்த வழக்கிற்கு எந்த எந்த ஆவணங்கள் தேவைப்படுகிறது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால், பத்திரம் தேவைப்படுகிறது என்று தெரியும். எனக்கு இந்த வழக்கு எண் தெரியுமா? என்றால், தெரியாது. நான் எடுத்து வந்த பத்திரம் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் இந்த வழக்கு எண் போட்டிருக்கிறதா? என்றால், இல்லை. எனக்கு வழக்கு எண் தெரியாது என்றும், நான் கொண்டு வந்துள்ள ஆவணத்திலும் வழக்கு எண் இல்லை என்றும், அதனால் நான் பொய் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல, தவறு. அனைத்து ஆவணங்களும் எடுத்து வர வேண்டும் என்று குறிப்பிட்ட போதும், குறிப்பாக இந்த ஆவணத்தை மட்டும் நான் எடுத்து வந்தது பொய் சாட்சியம் சொல்லத்தான் என்றால் சரியல்ல. நான் சிவகுமாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ள தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.